**CC.No**.113/2023

**Date**: 13.05.2026

**எ.ம.சா. 1 செல்வி, 50/2026, க/பெ, தங்கவேல், பாலையூர்.**
**(சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை**

1) எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் மகளிர் மன்றம் மூலமாக தெரியும். எந்த மன்றத்தில் இருந்தோம் என்பதை எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ICICI வங்கி மன்றம் ஆகும். புகார்தாரரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சியாக வருவதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா அல்லது எதிரி அழைத்து வந்தாரா என்றால் அழைப்பாணை வந்தது. எதிரியின் கணவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் கூலிவேலை செய்கிறார். எதிரியின் கணவரின் மாத வருமானம் எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி மல்லிகா எந்த நபர்களிடம் இருந்து கடன் பெற்றுள்ளார், எந்த வங்கிகளில் இருந்து கடன் பெற்றுள்ளார், எவர்களுக்கு கடன் திருப்பி செலுத்தியுள்ளார் என்ற விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது.

2) மஞ்சுளா, எதிரி மல்லிகா மற்றும் இராஜேஸ்வரி ஆகியோர் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். எதிரி கன்டனூர் ICICI வங்கியில் எப்போது கணக்கு தொடங்கினார் எவ்வளவு வரவு வைத்துள்ளர் போன்ற விபரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ICICI வங்கியில் இருந்து எதிரிக்கு எவ்வளவு எண்கள் உடைய காசோலை புத்தகம் கொடுக்கப்பட்டது, மற்றும் எந்த எந்த காசோலைகளை எதிரி பயன்படுத்தினார் என்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரியின் கையொப்பம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் எந்த வங்கி காசோலையை பயன்படுத்தி எதிரி மீது புகார் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு காசோலையில் உள்ள தேதி மற்றும் தொகை எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3) எதிரி மல்லிகா சொன்ன விபரங்களின் அடிப்படையில் எனது பிரமான வாக்குமூலம்

தயார் செய்து நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இராஜேஸ்வரியுடன் தற்போது பேச்சு வார்த்தை இல்லை, ஆனால் தற்போதைய வழக்கைப்பற்றி முழுவிரபம் தெரிந்து கொண்டதாக கூறினார். புகார்தாரர் இராஜேஸ்வரி மீதும் ஒரு காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பிரமான வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மல்லிகா, இராஜேஸ்வரி கூறியதால் எனக்கு தெரியும். இராஜேஸ்வரி சி.சி. 154/2022 காசோலை வழக்கில் புகார்தாரருக்கு செட்டில்மென்ட் செய்ததன் அடிப்படையில் 02.04.2026 அன்று வழக்கு முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) தற்போதைய வழக்கில் தற்போது வரை எதிரி மல்லிகா சாட்சியம் அளிக்க முன்வரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மல்லிகா, மஞ்சுளா, இராஜேஸ்வரி ஆகியோர்கள் நெருங்கிய உறவினர்கள் புகார்தாரர் மற்றும் நபர்களுக்கு பணம் தருவதாக கூறி மோசடி செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. குழுவில் உள்ள தலைவரான மஞ்சுளாதான் கையொப்பம் மோசடியாக செய்துள்ளார். அவ்வாறு மோசடியாக கையொப்பத்தை செய்துள்ளார் என்பதற்கு அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் அல்லது காசோலைகளுக்கு Stop payment கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

5) எதிரி மல்லிகாவின் கணவரை ஊரில் ஆறுமுகம் என்று அழைப்பார்கள் என்றால் சரியல்ல, இராமன் என்று அழைப்பார்கள். மஞ்சுளா மற்றும் அவரது மகன் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டார் என்றால் சரிதான். அந்த அவமானத்தில் மஞ்சுளா தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரிதான். மஞ்சுளா தற்போது சாட்சியாக வர இயலாத காரணத்தினால் எதிரியை வழக்கில் இருந்து விடுவிப்பதற்காக மஞ்சுளா என்பவர் பெயரை தவறாக பயன்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. இறந்த மஞ்சுளா எதிரியின் உடன் பிறந்த சகோதரியின் மகள் என்றால் சரிதான். எதிரியின் உடன் பிறந்த சகோதரியின் மகள் மஞ்சுளா என்பதனால் அவர் எதிரியின் காசோலையை தவறாக பயன்படுத்துவதற்கு எந்த ஒரு தேவையும் இல்லை என்றால் சரியல்ல. மஞ்சுளா தவறாக பயன்படுத்தியிருந்தால் எதிரி அவர் மீது சட்ட

நடவடிக்கை எடுத்திருப்பார் என்றாலும், தவறாக பயன்படுத்தாததால்தான் எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6) எதிரி தற்போதைய வழக்கில் சாட்சியாக வந்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதனால்தான் தற்போதைய வழக்கில் எதிரிக்கு சார்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.13 15:12:47 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.